**செய்தி வெளியீடு எண்: 143/2023** **நாள்: 01.12.2023**

## வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவன தலைமை அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பான நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை கூட்டம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) தலைமையில் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி தெரிவித்ததாவது:

வடகிழக்கு பருவமழை காரணமாக கனமழை, புயல் உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இவற்றை எதிர்கொள்ளும் வகையில் மெட்ரோ பயணிகள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யும் வகையில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மழைக்காலத்தில் ஏற்படும் எந்தச் சூழலையும் சமாளிக்க பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து செயல்படுகிறது.

மழை நீர் தேங்கும் இடங்களை கண்டறிந்து அங்கு மின் மோட்டார் மூலம் மழை நீரை வெளியேற்ற பல்வேறு திறன்களைக் கொண்ட 350 நீர் பம்புகள் தயார் நிலையில் இருக்க வேண்டும். பரங்கி மலை, கோயம்பேடு, அறிஞர் அண்ணா ஆலந்தூர், விம்கோ நகர் மற்றும் வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையங்களில் நீர் வெளியேற்றும் இயந்திரம் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

சைதாப்பேட்டை, கோயம்பேடு, மீனம்பாக்கம், புதிய வண்ணாரப்பேட்டை போன்ற உயர்மட்ட பாதையில் இருந்து சுரங்கப்பாதைக்கு செல்லும் வழியில் மழைநீர் சுரங்கப்பாதைக்கு செல்லாத வகையிலும், அப்பகுதிக்கு யாரும் மழைநீரை திருப்பி விடாமல் இருப்பதை கண்காணிக்கவும் காவல் துறையை சேர்ந்த காவலர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

சைதாப்பேட்டை, ஏஜி டி.எம்.எஸ், அரசினர் தோட்டம், அண்ணா நகர் கிழக்கு மற்றும் அண்ணா நகர் கோபுரம் ஆகிய சுரங்கப்பாதை மெட்ரோ இரயில் நிலைய நுழைவு வாயில்களில் தற்காலிக தடுப்பு சுவர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கட்டுப்பாட்டு அறையில்

இருந்து 24 மணி நேரமும் அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களையும் கண்காணிக்க குழு அமைக்கப்பட வேண்டும். இதற்கான உதவி எண் 1860-425-1515 24 மணி நேரமும் செயல்பட வேண்டும். முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளில் 200-க்கும் மேற்ப்பட்ட தொழிலாளர்கள் ஈடுப்பட்டுள்ளனர். மேலும், மழைநீர் மெட்ரோ இரயில் நிலையங்களுக்குள் வராத வகையில் தயார் நிலையில் போதுமான அளவிற்கு மண் மூட்டைகளும், நீர் வெளியேற்றும் இயந்திரங்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும். இப்பணிகள் அனைத்தையும் 24 மணி நேரமும் கண்காணிக்க பணியாளர்கள், அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்கள் பணியை விழிப்புடன் இருந்து செயல்ப்பட வேண்டும்.

சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டத்தில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் நடைபெறும் பகுதிகளில் மழைநீரால் ஏதேனும் பாதிப்பு ஏற்படாத வகையில் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் வழித்தடம் 3-ல் மாதவரம் பால்பண்ணை முதல் சிப்காட் சிறுசேரி வரை 8 அலுவலர்கள், வழித்தடம் 4-ல் கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி பைபாஸ் வரை 6 அலுவலர்கள், வழித்தடம் 5-ல் மாதவரம் பால்பண்ணை முதல் சோழிங்கநல்லூர் வரை 6 அலுவலர்கள் என மொத்தம் 20 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சவாலான வடகிழக்கு பருவமழைக் காலத்திலும், கட்டம்-2 திட்டத்தை குறித்த நேரத்தில் முடிக்கவும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் எடுத்துள்ளது.

இவ்வாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி மெட்ரோ இரயில் அலுவலர்களிடம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை பொது மேலாளர் ஏ.ஆர்.ராஜேந்திரன் (தொடர்வண்டி மற்றும் இயக்கம்), பொது மேலாளர் எஸ்.கே.நடராஜன் (மின் மற்றும் பராமரிப்பு), கூடுதல் பொது மேலாளர்கள் எஸ்.சதீஷ் பிரபு (தொடர்வண்டி மற்றும் இயக்கம்), டி.பி. வினோத் குமார் (மனிதவளம்), எஸ். கார்த்திகேயன் (மின் மற்றும் பராமரிப்பு), எஸ். சீனிவாசன், ஆலோசகர் எஸ். ராமசுப்பு மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**